மாலை முரசு
பக்கங்கள் 17 + 04

## முஸ்லிம் காங்கிரஸ் யாருக்கு ஆதரவு?

### நாளை தீர்மானம்

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாரை ஆத ரிப்பது என நாளைத் தீர்மா

04

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 18 சனிக்கிழமை 03.08.2024 | அதிர்வு 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்

# வைத்தியர் அர்ச்சுனா மன்னாரில் கைது!

## 7 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(மன்னார் நிருபர்)

**மன்னார் பொது வைத்திய சாலை வைத்தியர்கள் மேற் கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா இன்று பொலிஸாரால் கைது செய் யப்பட்டார்.**

நேற்று இரவு மன்னார் பொது வைத்தியசாலைக்குள் நுழைந்து குழப் பத்தை ஏற்படுத்தினார் என்று வைத் தியசாலை நிர்வாகம் மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட

04







## ஜனாதிபதித் தேர்தலில் முன்வைக்கப்பட வேண்டிய

# மலையகத் தமிழர் அபிலாஷை ஆவணத்துக்கு முற்போக்குக் கூட்டணி ஏகமனதாக அங்கீகாரம்

ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிடம் செய்யப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்காகத் தன்னால் முன்வைக்கப்பட்ட மலையகத் தமிழர் அபிலாஷை ஆவணத்தை ஐந்து திருத்தங்களுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது எனக் கூட்ட ணியின் தலைவர் மனோ

04



# உயிரிழந்த தமிழக மீனவரின் சடலம் இந்தியக் கடற்படையிடம் ஒப்படைப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

யாழ்ப்பாணம் – நெடுந்தீவு கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையின் படகு மோதி ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த தமிழகக் கடற்றொழிலாளரின் சடலம் கடல் மார்க்கமாக இராமேஸ்வரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதேநேரம் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட இரண்டு கடற்றொழிலாளர்களும் தமிழகத்தை அடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரையும் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலத்தையும் சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடற்படையினர் பொறுப்பேற்றனர்.









# திருக்கோவில் ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் நாளை!



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி தொண்டர் படை உறுப்பினர்களுக்கான அறிவித்தல் கலந்துரையாடல் ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி ஆலய தலைவரின் வேண்டுதலுக்கு அமைய பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதான கருப்பொருளாக பொது மக்களுக்கான பாதுகாப்பை அதாவது அவர்களது உடைமைகள் களவு போகாமல் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி பேசப்பட்டது.

அதுமட்டுமல்லாமல் பொது மக்களுக்குப் பாதுகாப்பும் வழங்கப்படும் என்று திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பத்மகுமார தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.பத்மகுமார, சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.ஜெகசுதன், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் எம். அரசரெட்ணம், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.கந்தசாமி மற்றும் ஆலய வண்ணக்கர் வ.ஜெயந்தன் செயலாளர் ஏ.செல்வராசா தொண்டர் படை உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மற்றுமொரு பாதுகாப்பு கூட்டம் இன்று சனிக்கிழமை திருக்கோவில் பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றது.


நாளைய (04) தீர்த்த உற்சவத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார் .

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் தலைமையில் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

பிதிர்க்கடன் செலுத்தும் ஆடி அமாவாசை உற்சவத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதற்காக முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீர்த்தத்தன்று பிதிர்க்கடன் செலுத்துவோருக்கு வசதியாகச் சிவாச்சாரியார்களை உள்ளடக்கிப் பிதிர்க்கடன் நிறைவேற்றும் வேலை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.



# சாவகச்சேரியில் 3 வாகனங்கள் மோதி விபத்து!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் ஏ – 9 வீதியில் முந்திச் செல்ல முயன்ற ஹயஸ் வாகனத்தால் மூன்று வாகனங்கள் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்து இன்று காலை 7.45 மணியளவில் சாவகச்சேரி – நுணாவில் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பஸ், ஹயஸ், டிப்பர் என்பன முறையே தொடர்ச்சியாகப் பயணித்தன.

ஒரு கட்டத்தில் ஹயஸ் வாகன சாரதி பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த வாகனத்தால் சடுதியாக ஹயஸ் வானைத் திருப்ப முற்பட்டபோது பஸ்ஸின் பின்பகுதியுடன் ஹயஸ் வாகனம் மோதியது.

ஹயஸ் வாகனத்துக்குப் பின்னால் வந்த டிப்பரும் ஹயஸ் வாகனத்தின் பின்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து காரணமாக ஹயஸ் வாகனம் பலத்த சேதமடைந்ததுடன் பஸ்ஸின் பின்பகுதி, டிப்பரின் முன்பகுதி என்பன சிறியளவில் சேதமடைந்தன.

விபத்தின்போது ஒருவருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படாத நிலையில் ஹயஸ் வாகனத்தின் சாரதி காயமடைந்தார்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாஸ

## அக்கட்சியின் தலைவர் அறிவிப்பு



(பாறுக் ஷிஹான்)

முன்னாள் நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தர ணியுமான கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ இந்த ஆண்டு ஜனா திபதித் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் முன்னிறுத்துவதாக தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ருஷான் மலிந்த தெரிவித்தார்.

அம்பாறையில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



### மலையகத்...

கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது:–

“சஜித் பிரேமதாஸ தலைமையில் அரசு உருவாகின்ற போது, நிறைவேற்றப்பட வேண்டிய வேலைத்திட்டங்களில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழரின் அபிலாஷை கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் கொழும்பில் கூடிய கூட்டணி அரசியல் குழுவினால் தீவிரமாக ஆராயப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், மேலதிக சில விடயங்கள் சேர்க்கைகளாகச் சேர்க்கப்பட்டும், சில திருத்தங்களுடனும் அரசியல் குழுவால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கல்வி, தொழில் பயிற்சி, இளைஞர் முன்னேற்றம், சுகாதாரம், போஷாக்கு, வாழ்வாதாரக் காணி, தொழில் வாய்ப்பு, வீடமைப்பு, காணி, கொழும்பு உட்பட மாநகரங்களில் குடிபெயர்ந்து வாழ்வோருக்குக் கல்வி – வீட்டு வசதி, அரச பொது நிர்வாகக் கட்டமைப்புக்குள் மலையகம், ஆட்சி உரிமையில் பங்கு ஆகிய தலைப்புகளின் கீழ் பல்வேறு விடயங்களை அடக்கிய ஆவணம், ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையாகக் கையெழுத்தாகும்.” – என்றார்.

### வைத்தியர்...

முறைப்பாட்டையடுத்து வைத்தியர் அர்ச்சுனா மன்னார் பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டார்.

அண்மையில் மன்னார், தம்பன்னை குளத்தைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் மரணம் அடைந்த சம்பவம் தொடர்பில் தகவல் சேகரிக்க வந்த வைத்தியர் அர்ச்சுனா, வைத்தியசாலை செயற்பாட்டு வைத்தியர்கள் மற்றும் சுகாதர ஊழியர்களின் சேவைக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்று மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து வைத்தியர் அர்ச்சுனா கைது செய்யப்பட்டு இன்று பிற்பகல் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.

### முஸ்லிம்...

னிக்கவுள்ளது.

அந்தக் கட்சியின் அரசியல் உயர்பீடக் கூட்டம், அதன் தலைமையகத்தில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போது யாருக்கு ஆதரவளிப்பது எனத் தீர்மானித்து அறிவிக்கப்படும் எனக் கட்சியின் பேச்சாளர் தெரிவித்தார்.

தற்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மாமாங்கேஸ்வரர் தேரோட்டம்!

(பழுவூரான்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்த களி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய தேரோட்டம் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் புடைசூழ இன்று சனிக் கிழமை (03) இடம்பெற்றது.

இதனைக் கண்டு கழிக்க இலங்கை யின் பல்வேறு பாகங்களிலும் இருந்து மக்கள் வருகை தந்து கலந்து கொண்டனர்.

ஆலய மகோற்சவம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின் றது. நாளை ஞாயிற்றுக்கிழமை (04) ஆடி அமாவாசை பிதிர்க்கடன் தீர்க்கும் புனித தினத்தில் நண் பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ள தீர்த்தோற்சவத்துடன் ஆலய உற்சவம் நிறைவுபெறவுள்ளது.





# மாணவர்களுக்கு உதவிகள் வழங்கிய ஒஸ்கார் அமைப்பு



ஆஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம் (ஒஸ்கார்) காரைதீவில் வசதி குறைந்த மாணவர்களுக்கு ஒரு தொகுதி பாதணிகளையும், சீருடைகளையும், புலமைப்பரிசில் 14 வருட கால வினா விடை நூலையும் வழங்கி வைத்தது.

இந்த நிகழ்வு விக்னேஸ்வரா வித்தி யாலயத்திலும், காரைதீவு விஷ்ணு வித்தியாலயத்திலும் நேற்று (02) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விக்னேஸ்வரா வித்தியாலய நிகழ்வு அதிபர் எஸ். சிவயோகராஜா தலைமை யிலும், விஷ்ணு வித்யாலய நிகழ்வு அதிபர் எஸ். ரவீந்திரன் தலைமையி லும் நடைபெற்றன.

இந்த இரு நிகழ்வுகளுக்கும் ஒஸ்கார் அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா பிரதமவிருந்தின ராகக் கலந்து கொண்டார்.

ஒஸ்கார் சார்பில் ஆசிரியர் கே. லோக நாதன், உ. சஜானந்த் ஆகியோர் ஏற்பாடுகளைச் செய்தனர்.

நிகழ்வில் ஆசிரியர்கள், மாண வர்கள் கலந்து கொண்டனர்.

இதனை ஒஸ்கார் அமைப்பின் சமூக சேவைக்கான இணைப்பாளரும் முன்னாள் ஒஸ்கார் தலைவருமான வீரக்குட்டி விவேகானந்தமூர்த்தி ஆஸ்தி ரேலியாவில் இருந்து ஒழுங்கமைப்பு செய்தனர்.

ஒஸ்கார் தலைவர் கந்தசாமி பத்ம நாதன் தலைமையிலான ஒஸ்கார் குழுவினர் பல சேவைகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அவசரம் அவசியமல்ல

வழமைக்கு மாறாக இம்முறை ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கையில் நான்கு பிரதான கட்சிகளின் அல்லது தரப்புக்களின் வேட்பாளர்கள் களம் இறங்குகின்றனர்.

சுயேச்சையாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அநுரகுமார திஸநாயக்க மற்றும் பொதுஜன பெரமுன சார்பில் பெரும்பாலும் கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேரா ஆகியோர் களமிறங்குகின்றனர்.

இந்த நால்வரில் தம்மிக்க பெரேரா வெற்றி வேட்பாளராக வர முடியவிடினும் கணிசமான வாக்குகளை சுவீகரிக்கக் கூடியவர் என்பது மறுக்கக் கூடியது அல்ல.

இப்படி நான்கு முனைப் போட்டியில் தென்னிலங்கை வாக்குகள் பிரிகின்றமையினால் வெற்றிக்கு கடும் பிரயத்தனம் - சில்லெடுப்பு - தெற்கில் நிச்சயம் உண்டு.

இதனால் வழமைக்கு மாறாக இந்தத் தேர்தலில் வெற்றி வேட்பாளரை தீர்மானிப்பதில் சிறுபான்மையினரின் - குறிப்பாக தமிழர்களின் - வாக்குகள் கணிசமாகப் பங்களிக்க போகின்றன என்பததே இப்போதைய களநிலைவரம் ஆகும்.

வாராது வந்த வாய்ப்பு இது. கிடைத்தற்கரிய பாக்கியம். கிடைத்த வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்துவதில்தான் அரசியல் வெற்றிகள் தங்கி இருக்கின்றன.

தென்னிலங்கை அரசுத் தலைவர் யார் என்பதை தீர்மானிப்பதில் கணிசமானதும் தீர்க்கமானதுமான ஒரு பங்களிப்பை வழங்குவதற்கு தமிழர்களுக்கு கிட்டியுள்ள அந்த வாய்ப்பை நல்ல சந்தர்ப்பமாக தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதன் மூலம் தமது எதிர்காலத்திற்கான அரசியல் செல்நெறியைச் சரியான பாதையில் தமிழர்கள் தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தை கோட்டை விட்டு விட்டால், இதுபோன்ற அற்புதமான ஒரு வாய்ப்பு தமிழர் தரப்புக்கு இனி அண்மைக்காலத்தில் கிட்டும் என்று நம்புவதற்கு இடமில்லை.

இப்போது இந்த விடயத்தில் தெற்கின் நான்கு பிரகிருதிகளில் யாரை ஆதரிப்பது என்ற விவகாரத்தில் தமிழர் தரப்பு அவசரப்படவே தேவையில்லை.

இந்த ஆரம்ப கட்டத்தில் எல்லாத் தரப்புகளுடனும் - நான்கு கட்சியினருடனும் - பேச்சுக்கான கதவுகளை திறந்து வைத்திருக்க வேண்டும். முரண்படாமல் ஊடாட வேண்டும். தமிழர் தரப்பின் நீதி, நியாயமான அபிலாசைகளை - எதிர்பார்ப்புகளை - வேணவாவை - நான்கு பிரதான வேட்பாளர்கள் தரப்புக்கும் தெளிவுபட எடுத்துரைக்க வேண்டும்.

தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நான்கு தரப்புக்களும் முன்வைக்கக்கூடிய தீர்வு யோசனைகளை - இலக்குகளை - ஐயம் திரிபற அறிந்து கொள்ள வேண்டும். தமது முடிவுகளை அக்கட்சிகள் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் பொது அறிவித்தல்கள் மூலம் பகிரங்கப்படுத்தச் செய்ய வேண்டும்.

அவற்றின் அடிப்படையில் தமிழர் தரப்பு தீர்மானம் ஒன்றை எடுத்து, தேர்தல் சமயத்தில் அதனை ஒரே குரலில் தமிழர்களின் பிரதிபலிப்பாகக் காட்டச் செய்யவும் வேண்டும்.

ஆனால் அதற்காக தமிழர் தேசம் அவசரப்படத் தேவையில்லை. அந்தரப்படவும் தேவையில்லை.

தமிழர்கள் தமது தீர்மானத்தை எடுப்பதற்கு தேர்தல் வாக்களிப்பு நெருங்கும் சமயம் வரை காத்திருக்கலாம். காத்திருக்க வேண்டும்.

அதிகாரப் பகிர்வை ஓரளவேனும் நடைமுறைப்படுத்துவதற்காக மாகாண சபை தேர்தலுக்கான தேர்தல்களை நடத்துங்கள் என்ற தமிழர் தரப்பின் கோரிக்கைக்கு இணங்கியுள்ள ரணிலின் அரசு, அதற்காக மாகாண சபை தேர்தல் சட்டமூலத்தை செப்டம்பர் 6ஆம் திகதி நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வருகின்றது. அதை எதிர்க்கத் தேவையில்லை.

அத்தோடு அத்தேர்தல் சட்டம் தொடர்பாக ஆளும் தரப்பு மட்டுமல்ல, எதிர் தரப்புக்களும் எப்படி நடந்து கொள்கின்றன என்று பார்த்து. அவற்றை எல்லாம் கணக்கில் எடுத்து, தமிழர் தமது தீர்மானத்தை இறுதிக்கட்டத்தில் முடிவு செய்வது சாலச் சிறந்தது.



# உலகத் தமிழ் கலை இலக்கிய மாநாடு மட்டக்களப்பில் நேற்று!













(பழுவூரான், ஹஸ்பர்)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம், பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை ஆகியன இணைந்து நடத்திய உலகத் தமிழ் கலை இலக்கிய மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை (02) மட்டக்களப்பில் கோலாகலமாக இடம்பெற்றது.

அரசடி சந்தியில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையைக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ சரவணன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து உலகத் தமிழ் கலை இலக்கிய மாநாடு மட்டக்களப்பு அரசடிச் சந்தியிலிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள், மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேற்றத்துடன் எளிர்ச்சியுடன் நடை பவனியாக வெபர் விளையாட்டரங்கைச் சென்றடைந்தன.



இதன்போது இலங்கை அஞ்சல் திணைக்களத்தால் உலகத் தமிழ் கலை இலக்கிய மாநாடு மட்டக்களப்பு மாநகரில் நடைபெறுவதை முன்னிட்டு அஞ்சல் முத்திரை வெளியிடப்பட்டது.

இந்த முத்திரைகள் ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் மலேசியா நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ சரவணன் ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உயர் அதிகாரிகள், மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எம்.சிவலிங்கம், கல்வித் திணைக்கள அதிகாரிகள், மாணவர்கள், இலக்கிய வாதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# குகதாசன் எம்.பிக்குக் கௌரவிப்பு!

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசனைக் கௌரவிக்கும் நிகழ்வு திரியாய் தமிழ் மஹா வித்தியாலயத் தில் திரியாய், கட்டுகுளம், கல்லம் பத்தை, செந்தூர் ஆகிய ஊர் மக்க ளால் நேற்று (02) ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பாடசாலை முதல்வர், இலங்கைத் தமிழரசுக் கட்சி மாவட்டக் கிளை உறுப்பினர், திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க உறுப்பி னர், ஊர் பொது மக்கள், நலன் விரும்பிகள், பள்ளி ஆசிரியர்கள் , மாண வர்கள் என பெருந்திரளானவர் பங்கு பற்றினர்.



இந்த நிகழ்வு மறைந்த பெருந் தலைவர் இரா. சம்மந்தன் ஐயாவின் நினைவேந்தலுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து மங்கள விலக்கேற்றல், வரவேற்பு நடனம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

# வீட்டு திட்டங்களுக்கு மின்சாரம் பெற சூரிய மின்கலம் அமைக்கத் திட்டம்!



(எம்.எம்.ஜெஸ்மின்)

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபை ஆகியவற்றால் நடைமுறைப் படுத்தப்பட்ட வீட்டு திட்டங்களுக்கு சூரிய மின்கல மின்சார உற்பத்தி மூலம் மின் சார வசதிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பாகக் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் கலந்துரையாடப்பட்டது.

இந்த வீடுகளில் வாழும் குடும்பங்க ளின் மின்சார தேவைகளை இலவச மாகவும் மேலதிகமாக உற்பத்தி செய்யப் படும் மின்சாரத்தை இலங்கை மின்சார சபைக்கும் விற்பனை செய்வதற்குமான நடவடிக்கை தொடர்பிலும் பேசப்பட்டது.

ஒப்பந்த காலத்துக்குப் பின்னர் மின் சாரம் உற்பத்தி செய்யப்படும் சூரியமின் கலத் தொகுதிகள் குறிப்பிட்டபயனாளி களுக்குச் சொந்தமாவதுடன் அதிலி ருந்து உற்பத்தி செய்யப்படும் மேலதிக மின் சாரத்தை இலங்கை மின்சார சபைக்கு நேரடியாகவே விற்பனை செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தை பெற முடியும் எனவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம். பி. ரத்நாயக, ஆளுநரின் செயலாளர் எம். மதநாயக, தேசிய வீடமைப்பு அதி கார சபையின் தவிசாளர் ராஜிவ் சூர்யா ராச்சி, உப தவிசாளர் லக்ஷ்மன் குணவர் தன,பொதுமுகாமையாளர்கே.ஏ.ஜானக, திருகோணமலைமாவட்டமுகாமையாளர் பொறியாளர் நிமல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பத்தினிபுரம் கிராம மக்கள் பயன்படுத்திய மயானத்தை மீட்டுத் தருமாறு கோரிக்கை

## ஆளுநரின் ஆலோசகர் நேரில் சென்று ஆராய்வு





(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, தம்பலகாமம், பத்தினிபுரம் கிராம மக்கள் காலாகாலமாகப் பயன்படுத்திவந்த மயானத்தை பெற்றுத் தருமாறுகோரி ஆளுநரிடம் முறையிட்டிருந்தார்கள்.

இதனையடுத்து அவருடைய பணிப்பின்பேரில் ஆளுநரின் ஆலோசகர் உட்பட ஒரு குழுவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (01) பத்தினிபுரம் கிராமத்துக்கு விஜயம் மேற்கொண்டு குறித்த இடத்தைப் பார்வையிட்டதுடன் மக்களுடனும் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் ஆளுநரின் ஆலோசகர் சிவராஜா, திருகோணமலை தமிழர் பேரவையின் செயற்பாட்டாளர் நிக்களஸ், வனவளத்துறை அதிகாரிகள், தம்பலகாமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட சிவில் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அந்தப் பகுதியில் இறந்த உடல்களை அடக்கம் செய்யலாம் எனவும் ஆனால் துப்பரவு செய்ய முடியாது எனவும் வருகைதந்திருந்த வனவள பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டிருந்தனர்.

இதனை ஏற்றுக் கொள்ளாத பொது மக்கள் தமது மயானத்தை தமது பாவனைக்காக முழுமையாக விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். இந்த விடயத்தை ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்று நிரந்தர தீர்வை பெற்றுத் தருவதாக ஆளுநரின் ஆலோசகர் குறிப்பிட்டார்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பத்தினிபுரம் கிராம மக்கள் மயானம் இன்றி தங்களுடைய உறவுகளது இறந்த உடல்களை அடக்கம் செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

1970ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே காலாகாலமாக பத்தினிபுரம் கிராம மக்கள் மயானமாக பயன்படுத்தி வந்த இடமானது 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து சென்று மீண்டும் வந்தபோது வளவள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அவர்களுடைய எதிர்ப்புக்கு மத்தியில் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்து வருவதாகவும், ஒரு மனிதனுடைய இறுதிக் காரியத்தைக் கூட கௌரவமாக செய்ய முடியாதுள்ளது என்றும் மயானத்தை மீட்டுத் தருமாறும் மக்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.





# சர்வமதத் தலைவர்களால் விஜயதாஸ கௌரவிப்பு!

சர்வமத தலைவர்களால் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை முன்னிட்டுத் தனது முதலாவது பிரச்சார கூட்டத்தை கொழும்பில் உள்ள சட்ட மன்ற நிலையத்தில் நேற்று ஏற்பாடு செய்திருந்தார்.

இதன்போதே சர்வமத தலைவர்களான சர்வ மத தலைவர்களான டாக்டர் ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, கலஹமே தம்மரன்சி தேரர், மௌலவி முசாமில், அருட்தந்தை சுரேன் ஆகியோர் கலந்து கொண்டனர்.









# தனியார் சொகுசு பஸ் – லொறி விபத்து!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியின் பாமஸ்டன் பகுதியில் லொறி ஒன்றுடன் தனியார் சொகுசு பஸ் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை (02) இடம்பெற்றுள்ளது . விபத்தின் போது பஸ்ஸில் பயணித்த 8 பேர் காயங்களுக்கு ஆளான நிலையில் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியாவில் இருந்து ஹட்டனை நோக்கிப் பயணித்த தனியார் சொகுசு பஸ் தலவாக்கலையில் இருந்து நுவரெலியா நோக்கி பயணித்த லொறியுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.








# ஆஸ்ரேலியா வன்னிஹோப் நிறுவனத்தால் கணித பாட கற்றல் வளங்கள் பகிர்ந்தளிப்பு






(நடராஜா மலர்வேந்தன்)

ஆஸ்ரேலியா வன்னிஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் பதுளை பாரதி தமிழ் மகா வித்தியாலய இடைநிலை மாணவர்களின் பயன்பாட்டுக்காகக் கணித செயற்பாட்டு வகுப்பறைக்கான கணித பாட கற்றல் வளங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதன்போது நிறுவன தலைவர் ரஞ்சன் சிவஞானசுந்தரம், செயலாளர் டாக்டர் மாலதி வரன், இயக்குநர் வள்ளுவன் தில்லைநடராஜா, இணைப்பாளர் காண்டீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# ‘செயற்பட்டு மகிழ்வோம்’ நிகழ்வில் மன்னார் சேவியர் கல்லூரி சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மன்னார் வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான “செயற்பட்டு மகிழ்வோம்” நிகழ்வில் மன்னார் புனித சேவியர் கல்லூரி வரலாற்று சாதனை படைத்துள்ளது.

மன்னார் வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான “செயற்பட்டு மகிழ்வோம்” நிகழ்வில் மன்னார் புனித சேவியர் கல்லூரி ஆண்களுக்கான தரம் 3 , தரம் 4 மற்றும் தரம் 5 ஆகிய வகுப்பு பிரிவுகளில் முதலிடம் பெற்று சாதனை படைத்து மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.







# அறநெறி மாணவர்களின் ஆக்கத் திறன் வெளிப்பாடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆக்கத் திறனை வெளிக்கொணரும் போட்டிகளில் களுவாஞ்சிகுடி சைவ மகாசபை அறநெறிப்பாடசாலை மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பேச்சாற்றல், கதாப்பிரசங்கம், நீதிநூல் ஒப்புவித்தல், பண்ணிசை, சொல்லாடல் திறன், நாடகம், வில்லிசை, பரதநாட்டியம் ஆகிய அனைத்து பிரிவுகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்றுள்ளார்கள்.

கடந்த 72 வருடங்களாக களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் சமயப்பணி, சமூகப் பணி, கல்விப்பணி எனத் தொண்டாற்றிவரும் களுவாஞ்சிகுடி சைவ மகா சபை தற்போது கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.மதிசீலன் தலைமையில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் சைவமகா சபை அறநெறிப்பாடசாலையின் இந்த வெற்றிகளுக்கு காரணமான அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், சைவ மகா சபையினர் மற்றும் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம், களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலயம், களுவாஞ்சி குடி விநாயகர் வித்தியாலயம், களுவாஞ்சிகுடி மாரியம்மன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் , ஆசிரியர்கள், அதிபர்கள் பெற்றோர்கள் பங்கேற்றனர்.











# இலங்கை கடற்படை கப்பல் மோதி உயிரிழந்த மீனவர் உடல் இராமேஸ்வரம் சென்றடைந்தது



இலங்கை கடற்படை ரோந்து கப்பல் மோதியதில் நடுக்கடலில் மூழ்கி உயிரிழந்த மீனவரின் உடல் இன்று இராமேஸ்வரத்துக்கு கொண்டுவரப்பட்டது. இந்த சம்பவத்தில் உயிருடன் மீட்கப்பட்ட 2 மீனவர்களும் இன்று அதிகாலை மீன்பிடித் துறைமுகத்தை சென்றடைந்தனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து ஜூலை 31 ஆம் திகதி கடலுக்குச் சென்ற கார்த்திகேயன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகின் மீது இலங்கை கடற்படை ரோந்து கப்பல் மோதியதில் படகிலிருந்து மூழ்கி மீனவர் மலைச்சாமி (வயது 59) உயிரிழந்தார். மீனவர் ராமச்சந்திரன் (வயது 64) கடலில் மாயமானார். முத்துமுனியாண்டி (வயது 57), மூக்கையா (வயது 54) ஆகிய 2 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு, கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு எதுவுமின்றி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும், இரண்டாவது நாளாக நடுக்கடலில் மாயமாகிய மீனவர் ராமச்சந்திரனை தேடும் பணிகள் கடற்படை ஹெலிகாப்டர், கடலோர காவல் படையின் ரோந்து படகுகளின் மூலம் தொடர்ந்து நடைபெற்றது.

இந்த நிலையில் மலைச்சாமியின் உடலை யாழ்ப்பாணம் அரசு மருத்துவமனையில் உடற்கூற்று பரிசோதனை செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

அதனையடுத்து உயிருடன் மீட்கப்பட்ட 2 மீனவர்கள் மற்றும் மலைச்சாமி உடலை நேற்று இரவு காங்கேசன்துறை கடற்படை முகாமில் இருந்து இலங்கை கடற்படைக்கு சொந்தமான ரோந்து படகில் அனுப்பி வைத்தனர்.

அனுப்பி வைக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் உடலை சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.ஸ். பித்ரா கப்பலில் இலங்கை கடற்படையினர் ஒப்படைத்தனர்.

உடலை பெற்றுக்கொண்ட இந்திய கடற்படை வீரர்கள் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திற்கு கொண்டுசென்று இன்று அதிகாலை 4.30 மணியளவில் இராமேஸ்வரம் மீன்வளத்துறை உதவி இயக்குநர் அப்துல் காதர் ஜெயிலானியிடம் ஒப்படைத்தனர்.

அதனையடுத்து அவரது உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அங்கு இராமேஸ்வரம் வட்டாட்சியர் செல்லப்பா மலைச்சாமியின் உடலுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். அதேபோல் இலங்கைக் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்ட 2 மீனவர்களும் விசாரணைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதுகுறித்து அந்த மீனவர்களில் ஒருவரான மூக்கையா செய்தியாளர்களிடம் கூறும்போது,

“நடுக்கடலில் திடீரென வந்த இலங்கை கடற்படை ரோந்துப் படகு எங்கள் மீன்பிடி படகின் மீது மோதியதில் இரண்டு நிமிடத்தில் படகு மூழ்கியது. படகில் இருந்த நாங்கள் கடலில் தத்தளித்த நிலையில் எங்கள் இருவரை மட்டும் இலங்கை கடற்படையினர் உயிருடன் மீட்டனர். எங்களுடன் வந்த ராமசந்திரனை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. மலைச்சாமியை பிணமாகத்தான் மீட்க முடிந்தது.

அதன்பிறகு எங்களை இலங்கை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று பல மணி நேரம் விசாரித்தனர். அதன் பிறகு காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பின்னர் யாழ்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரக அதிகாரிகள் சிறப்பு கவனம் செலுத்தி பத்திரமாக எங்களை தாயகம் அனுப்பி வைத்தனர். அதற்காக இந்திய துணை தூதரக அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்” – என்றார்.




# உணவு பாதுகாப்புக்கான தீர்வை இந்தியா கண்டுபிடித்து வருகிறது

## பிரதமர் மோடி தெரிவிப்பு





“உலகின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கான தீர்வுகளை இந்தியா கண்டுபிடித்து வருகிறது என்று வேளாண் பொருளாதார நிபுணர்களின் சர்வதேச மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

வேளாண் பொருளாதார நிபுணர்களின் 32 ஆவது சர்வதேச மாநாட்டு புதுடில்லியில் இன்று தொடங்கியது. 4 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இதன்போது பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

“65 ஆண்டுகளுக்குப் பிறகு இது போன்ற மாநாடு இந்தியாவில் நடைபெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது. நீங்கள் அனைவரும் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருக்கிறீர்கள். இந்தியாவின் 12 கோடி விவசாயிகள், 3 கோடி பெண் விவசாயிகள், 3 கோடி மீனவர்கள் சார்பாக உங்களை வரவேற்கிறேன். தற்போது நீங்கள் 55 கோடி விலங்குகள் வாழும் ஒரு நாட்டில் இருக்கிறீர்கள். விவசாயம் ஆதிக்கம் செலுத்தும், விலங்குகளை நேசிக்கும் நாட்டிற்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன்.

உணவு மற்றும் விவசாயம் பற்றிய எங்கள் பாரம்பரியங்களும் அனுபவங்களும் எங்கள் நாட்டைப் போலவே பழமையானவை. இந்தியாவின் விவசாய பாரம்பரியத்தில், அறிவியலுக்கும் தர்க்கத்திற்கும் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. மருத்துவ குணங்கள் கொண்ட உணவை உட்கொள்ளும் ஆயுர்வேத விஞ்ஞானம் எங்களிடம் உள்ளது. இது இந்திய சமூகத்தின் ஓர் அங்கமாக இருந்து வருகிறது. கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன், ‘கிருஷி பராசரர்’ என்ற கிரந்தம் எழுதப்பட்டது. அது மனித வரலாற்றின் பாரம்பரியம்.

விவசாயத்தைப் பொருத்தவரை இந்தியாவில் இன்றும் நாங்கள் ஆறு பருவங்களை மனதில் வைத்துதான் திட்டமிடுகிறோம். எங்களிடம் 15 விவசாய காலநிலை மண்டலங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் தனித்த சிறப்புகளைக் கொண்டுள்ளது. இங்கிருந்து சுமார் 100 கிலோமீட்டர் பயணம் செய்தால் அங்கு விவசாயம் வேறுமாதிரி நடக்கும். இந்த பன்முகத்தன்மை இந்தியாவை உலகின் உணவுப் பாதுகாப்புக்கான நம்பிக்கைக் கீற்றை வழங்குகிறது.

இன்று இந்தியா உணவு உற்பத்தியில் உபரி நாடாக திகழ்கிறது. உலகின் மிகப் பெரிய பால், தானியங்கள், பருப்பு உற்பத்தியாளர்களாக நாங்கள் இருக்கிறோம். ஒரு காலத்தில் இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு உலகின் கவலையாக இருந்தது. இன்று இந்தியா உலகளாவிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கான தீர்வுகளை கண்டுபிடித்து வருகிறது.

தண்ணீர் பற்றாக்குறை மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை ஊட்டச்சத்துக்கு ஒரு பெரிய சவாலாக உள்ளது. ஆனால் இதற்கு இந்தியாவிடம் ஒரு தீர்வு உள்ளது. சிறுதானியங்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடாக இன்று இந்தியா உள்ளது. இந்த சிறுதானியங்களை உலகம் சூப்பர்ஃபுட் என்று அழைக்கிறது. நாங்கள் அதற்கு ஸ்ரீ ஆன் என்று பெயரிட்டுள்ளோம். குறைந்தபட்ச நீர் மற்றும் அதிகபட்ச உற்பத்தி என்ற கொள்கையின் அடிப்படையில், இந்தியாவின் சூப்பர்ஃபுட் உலகளாவிய ஊட்டச்சத்து பிரச்சினையை தீர்க்கும். இந்தியா தனது சூப்பர்ஃபுட்களை உலகத்துடன் பகிர்ந்து கொள்ள தயாராக உள்ளது.”

– என்றார்.



# பலஸ்தீனக் கொடி போர்த்தப்பட்டு இஸ்மாயில் ஹனியே உடல் நல்லடக்கம்

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் படுகொலை செய்யப்பட்ட ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனீயேவின் இறுதிச் சடங்குகள் நிறைவடைந்துள்ளது.

இஸ்மாயில் ஹனீயேவின் உடல் நேற்று வெள்ளிக்கிழமை கட்டாரின் தலைநகர் டோஹாவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இறுதிச் சடங்கில் பலஸ்தீனத்தின் கொடி போர்த்தப்பட்ட ஹனீயேவின் பூதவுடன் தாங்கிய பெட்டியைச் சுற்றி அவருடன் கொல்லப்பட்ட பாதுகாவலர்களின் பூதவுடல் தாங்கிய பெட்டிகளும் வைக்கப்பட்டிருந்தன.

தலைநகர் தோஹாவிலுள்ள அப்துல் - அல் வஹாப் மசூதியில் நடைபெற்ற இறுதிச் சடங்கில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்று ஹனியேவுக்கு அஞ்சலி செலுத்தினர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், டோஹாவில் அமைந்துள்ள அப்துல்-அல் வஹாப் பள்ளிவாசலில் நடைபெற்ற இறுதிச் சடங்கில் கட்டார் ஜனாதிபதி ஷேக் தமீம் பின் ஹமத் அல்-தானி, கத்தார் மன்னர் ஷேக் தமீம் பின் ஹமத் அல்-தானியும் பங்கேற்றுள்ளனர்.

மேலும், இஸ்மாயில் ஹனியிவுக்கு அடுத்தபடியாக ஹமாஸின் அரசியல் பிரிவு தலைமைப் பொறுப்பை ஏற்கலாம் என்று கூறப்படும் அவரது நெருங்கிய உதவியாளர் காலித் மிஷாலு ஹமாஸைப் போன்ற மற்றொரு பாலஸ்தீன ஆயுதக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் தலைவர் கலீல் அல்-ஹய்யா உள்ளிட்டோரும் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.






# ஈரானுக்கான அனைத்து விமானங்களையும் இடைநிறுத்தியது துருக்கிய ஏர்லைன்ஸ்

துருக்கிய ஏர்லைன்ஸ், ஈரானுக்கான அனைத்து விமானங்களையும் இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பானது, நேற்றைய தினம் வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஈரானில் பல இடங்களுக்கு திட்டமிடப்பட்ட விமான சேவைகள் இன்று சனிக்கிழமை வழமைக்கு திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே பதற்றம் நிலவி வரும் நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கடந்த புதன்கிழமை படுகொலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில், இஸ்மாயில் ஹனியேவை இஸ்ரேல் கொன்றதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேல் மீது பாரிய தாக்குதல் ஒன்று நடத்தப்படும் என ஈரான் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்: தொடரும் எரிமலை வெடிப்பு

பிலிப்பைன்ஸில் உள்ள மின்டானோ தீவின் கிழக்குக் கரையில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று அதிகாலை 6.8 ரிக்டர் அளவில் குறித்த நிலநடுக்கம் ஏற்பட்ட” தாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் கடலில் பூமிக்கடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலை கொண்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தினால் சுனாமி ஏற்படும் அபாயம் இல்லை என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால் சேதம் ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என்றாலும், நிலநடுக்கத்துக்குப் பிந்திய நிலஅதிர்வுகள் ஏற்படக்கூடும் என பிலிப்பைன்ஸ் நிலநடுக்க ஆய்வு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிலிப்பைன்ஸ் பசிபிக் பெருங்கடலின் ‘ரிங் ஓப் ஃபயர்’ எனும் பகுதியில் அமைந்துள்ளதால் இங்கு எரிமலை வெடிப்பு மற்றும் நிலநடுக்கங்கள் அடிக்கடி நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பக்கங்கள் 04

# கனடா முரசு

சனிக்கிழமை 03/08/2024

## கனடாவில் புதிய வீடுகளுக்கு வரிச் சலுகை தரக் கோரிக்கை

ஒன்ராரியோ, ஓகஸ்ட்03
கனடாவில் புதிய வீடுகளுக்கு வரிச் சலுகை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
ஒன்றாரியோ மாகாண கட்டு மான நிறுவனங்கள் 02



# பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனடாவுக்கு 10 ஆவது தங்கம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 03

2024 பரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடா பத்தாவது பதக்கத்தை நேற்று சுவீகரித்தது.

பெண்களுக்கான 200 மீற்றர் பக்ஸ்ட்ரோக் நீச்சல் போட்டியில் கனடா வெண்கலம் வென்றுள்ளது.

கனடிய வீராங்கனை கைலி மாஸ் இந்தப் பதக்கத்தை வெற்றி பெற்றார்.

பரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடா வெற்றி பெறும் பத்தாவது பதக்கம் இதுவாகும்.

இவற்றில் ஐந்து பதக்கங்களை நீச்சல் போட்டியில் கனடா வெற்றி பெற்றுள்ளது.

இதுவரை கனடா மூன்று தங்கம், இரண்டு வெள்ளி, ஐந்து வெண்கலம் என மொத்தம் பத்துப் பதக்கங்களை வெற்றி பெற்றுள்ளது.

# சம்மர் மெகின்டோஸ்க்கு மீண்டும் தங்கப் பதக்கம்!

ஒன்ராரியோ, ஓகஸ்ட்03

2024 பரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டியில் சம்மர் மெகின்டோஸ் மீண்டும் ஒரு தங்கப் பதக்கத்தை வெற்றி பெற்றுள்ளார்.

பெண்களுக்கான 200 மீட்டர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் வியாழக்கிழமை அவர் தங்கம் வென்று ஒலிம்பிக்ஸ் சாதனை படைத்தார்

பரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடா வெற்றி பெறும் எட்டாவது பதக்கம் இது வாகும்.

சம்மர் மெக்கின்டோஸ் ஏற்கனவே இம்முறை ஒலிம்பிக்ஸ் போட்டியில் இரண்டு பதக்கங்களை வெற்றி பெற்றார்.






# ஸ்ரெட்போட் துப்பாக்கிச் சூட்டில் இருவர் சாவு; இருவருக்குக் காயம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 03

ஸ்ரெட்போட் நகரில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தமையுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

ஓகஸ்ட் முதலாம் திகதி இரவு 10:45 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

பொலிஸார் சம்பவ இடத்தை சென்றடைந்த போது துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நால்வர் மீட்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டது.

ஏனையவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் பின்னர் இறந்ததார் என அறிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். இறந்தவர்களில் துப்பாக்கிச் சூடு நடத்தியவரும் அடங்குகின்றார் என ஸ்ரெட்போட் பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

# தென்மேற்கு ஒன்றாறியோவில் நீரில் மூழ்கி இருவர் உயிரிழப்பு

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 03

கனடாவின் தென்மேற்கு ஒன்றாறியோ பகுதியில் இரண்டு பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் 66 வயதான பெண் எனவும் மற்றையவர் 16 வயதான சிறுவன் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்த நீரில் மூழ்கிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஹரோன் கவுன்டி பகுதியில் கடலில் மூழ்கிய பெண் ஒருவரை மீட்பு பணியாளர்கள் மீட்டுள்ளனர்.

எனினும் அந்தப் பெண்ணுக்கு தேவையான முதல் உதவிகள் வழங்கப்பட்ட போதும் அந்தப் பெண் உயிரிழந்து விட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஷ்பீல்ட் கால்புரோன் வாவானோஸ் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரணத்திற்கான காரணம் தொடர்பில் தொடர்ந்தும்



விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, லேக் ஷோர் பகுதியில் 16 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

## கனடாவில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

புதிதாக வீடுகளை நிர்மாணிக்கும் போது அறவீடு செய்யப்படும் வரித். தொகையைக் குறைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இது வீடுகளை கொள்வனவு செய்பவரின் கொள்வனவு இயலுமையை அதிகரிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

18 கட்டுமான நிறுவனங்கள் கூட்டாக இணைந்து எதிர்வரும் 10 ஆண்டுகால பகுதியில் சுமார் ஒரு லட்சம் புதிய வீட்டு அலகுகளை நிர்மாணிக்க உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.





# இஸ்ரேலுகான விமான சேவைகளை பல நிறுவனங்கள் ரத்து செய்கின்றன

## எயார் கனடாவும் 15 ஆம் திகதி வரை சேவை நிறுத்தம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட்03

இஸ்ரேல் நாட்டிற்கான விமான சேவைகளை பல நிறுவனங்கள் ரத்து செய்யத் தொடங்கியுள்ளன. ஈரானில் நடந்த தாக்குதலில் ஹமாஸ் அரசியல் தலைவர் கொல்லப்பட்ட நிலையில், இஸ்ரேலைப் பழி தீர்ப்பது உறுதி என்றே ஈரான் சூளுரைத்துள்ளது.

இதே சமயம் ஜூலை 13 ஆம் திகதி ஹமாஸ் படைகளின் இராணுவப் பிரிவு தலைவர் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இந்த நெருக்கடியான சூழலில், விமான சேவை நிறுவனங்கள் இஸ்ரேலுக்கான விமானங்களை இரத்து செய்யத் தொடங்கியுள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

டெல்டா மற்றும் யுனைட்டட் விமான சேவை நிறுவனங்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக இஸ்ரேலுக்கான சேவையை நிறுத்தி வைத்துள்ளன என அறிவித்துள்ளது. புதன்கிழமை நள்ளிரவு முதல் விமான சேவைகள் ரத்து செய்யப்படுவதாக யுனைட்டட் அறிவித்துள்ளது.



டெல்டா விமான சேவை நிறுவனம் தெரிவிக்கையில், தங்களின் இணையப் பக்கமூடாக எயார் பிரான்ஸ் மற்றும் எல் அல் இஸ்ரேல் ஆகிய விமானங்களில் இஸ்ரேலுக்கு முன்பதிவு செய்யலாம் என குறிப்பிட்டுள்ளது.

மேலும், ஓகஸ்ட் 14க்கு முன் டெல்டா நிறுவனத்தில் டெல் அவிவ் அல்லது அங்கிருந்து பயணத்தை முன்பதிவு செய்த வாடிக்கையாளர்களுக்கு பயண விலக்கு வழங்கப் பட்டுள்ளது என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனிடையே, எயார் கனடா நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையில் இஸ்ரேலுக்கான தங்கள் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோவில் இருந்து ஒக்டோபர் 15 ஆம் திகதி இஸ்ரேலுக்கு அடுத்த விமானம் புறப்பட உள்ளது. 2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட தாக்குதலை அடுத்து பல விமான சேவை நிறுவனங்கள் இஸ்ரேலுக்கு விமான சேவையை ரத்து செய்தமை குறிப்பிடத்தக்கது.





# வரியாகப் பெருந்தொகைப் பணத்தை வாரியிறைக்கும் கனடியக் குடும்பங்கள்

கனடிய மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கான செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது அதிக அளவு வரி செலுத்துகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் குடும்பங்கள், பெருந்தொகையை வரிக்காக செலவிடுகின்றன என அண்மையில் பிரேசர் நிறுவகத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் சராசரியாக குடும்பம் ஒன்று தங்களது வருமானத்தில் 43 வீதம் வரையில் வரியாக செலுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வரிகளில் அனேகமானவை மறைமுக வரிகள் எனவும் கூறப்படுகிறது.

கனடாவில் சராசரி குடும்பம் ஒன்று வருடாந்த வருமானமாக 1,09,235 டொலர்களைஓ பெற்றுக் கொள்வதாகவும், இதில் 46,988 டொலர்களை வரியாக செலுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1961 ஆம் ஆண்டில் சராசரி வருமானம் 5,000 டொலர்கள் எனவும் இதில் 1,625 டொலர்கள் வரியாக செலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஒருவர் குறித்து பொலிஸார் அறிவிப்பு

கனடாவில் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

24 வயதான பைஸான் அலி என்பவரே இவ்வாறு பொலிஸாரினால் தேடப்பட்டு வருகின்றனர்.

கடந்த 2021 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி இந்நபர் வாகன விபத்து ஒன்றுடன் சம்பந்தப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் ஒருவர் ஒருவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் பைஸான் அலிக்கு நீதிமன்றம் 11 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளது.

எவ்வாறு எனினும் அவர் தப்பிச் சென்றுள்ளார் எனவும் இவரைக் கண்டால் அவரின் அருகாமைக்குச் செல்லாமல் பொலிஸாருக்குத் தகவல் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேக நபருக்கு எதிராக



பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் ஹமில்டன் பகுதியில் இருக்கின்றார் என தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரை கண்டால் 911 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த நபருக்கு எதிராக ஆயுதங்கள் தொடர்பான பல்வேறு குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.